MJM. Saneer MA
saneermjm@gmail.com
0779801693 / 071 191 6768

# சர்வதேச அரசியல்

(International Politics - Politics Among Nations)

MJM
neer M

# சர்வதேச அரசியல்

MJM. Saneer MA

---

### தேசிய மற்றும் சர்வதேச அரசியலின் வேறுபாடுகள்

- தேசிய அரசியல் என்பது நாடுகளின் உள்ளக அரசியலைக் கற்றலாகும். ஆனால் சர்வதேச அரசியல் என்பதை தேசங்களுக்கிடையிலான (அரசுகள்) அரசியல் என எளிமையாக விளக்கலாம். இதனை தேசங்களின் வெளிவாரியான தொடர்புகள் எனக் குறிப்பிடலாம் அரசுகளுக்கிடையே காணப்படும் அரசியலைக் கற்பதனூடாக சர்வதேச அரசியல் பாடம் உருவாக்கப்பட்டுள்ளது.

- தேசிய அரசினுள் அதன் அதிகாரத்தை நடைமுறைப்படுத்துவதற்காக அரசாங்கம் (Government) முக்கியமானதொரு அரசியல் அலகாக செயற்படுகின்றது. ஆனால் சர்வதேச சமூகத்தில் இதுபோன்ற அதிகாரமிக்க அரசாங்கம் ஒன்றைக் காண முடியாது.

- அரசின் உள்ளக நிறுவனக் கட்டமைப்பு, அதிகாரம், அரசு மற்றும் அதன் நிறுவனங்களோடு பிரசைகள் கொண்டுள்ள தொடர்புகள், போன்றன தேசிய அரசியலின் முக்கியத்துவமான விடயங்களாகும். ஆனால் சர்வதேச அரசியல், பொது உடன்படிக்கைகள், ஒத்துழைப்பு இயக்கங்கள், சர்வதேச அமைப்புகள் மற்றும் சட்டம், சட்ட ஒழுங்குகளைப் பேணும் நிறுவனங்கள் போன்றவற்றினூடாகக் கட்டியெழுப்பப்பட்டுள்ளன.

- சர்வதேச அரசியல் அமைதிப் போக்குத் தொடர்புகள் போர் ரீதியான தொடர்புகள் என இருவகைத் தொடர்புகளைக் காணலாம். ஆகவே சர்வதேச அரசியல் போரும் சமாதனமும் பற்றிய கற்றல் விடயம் என இனங்கானப்பட்டுள்ளது. இரண்டாம் உலக மகா யுதத்த்தின் பின்னர் மீண்டும் அவ்வாறானதொரு உலக அழிவொன்று ஏற்படுவதைத் தவிர்ப்பதற்காக உலக மக்கள் ஐக்கிய நாடுகள் தாபனத்தை உருவாக்கினர.

### சர்வதேச அரசியலில் பிரதான செயற்பாட்டாளர்கள்

சர்வதேச அரசியலின் இயல்பினைத் தீர்மானிப்பதில் செல்வாக்குச் செலுத்தும் அமைப்புக்களாக பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.




மேற்குறிப்பிட்ட பிரதான செயற்பாட்டாளர்களுக்கு அப்பால் சர்வதேச அரசியலின் இயல்பினைத் தீர்மானிப்பதில் சூழல்சார் தாக்கங்கள் குறிப்பாக புவி வெப்பமடைதல், நீரப் பற்றாக்குறை, இயற்கை அனர்த்தங்கள், சுகாதாரப் பிரச்சினைகள் HIV/AIDS, Covid 19/Corona Virus தீர்மானமிக்கதொரு தாக்கத்தினை ஏற்படுத்துகின்றது.

MJM. Saneer MA

## சர்வதேச அரசியலில் பிரதான செயற்பாட்டாளர்கள் மற்றும் அவற்றுக்கான உதாரணங்கள்

| | |
|---|---|
| 1) தேசிய அரசுகள் | • ஐக்கிய அமெரிக்கா, சீனா, இந்தியா, இலங்கை போன்ற நாடுகள் |
| 2) சர்வதேச அரச நிறுவனங்கள் | 1) **உலகலாவிய அமைப்புக்கள்:** ஐக்கிய நாடுகள் சபை<br>2) **பிராந்திய அமைப்புகள்:** சார்க், ஐரோப்பிய ஒன்றியம்<br>3) **பாதுகாப்பு ஒழுங்கமைப்பு:** வட அத்திலாந்திக் உடன்பாட்டு அமையம; (NATO)<br>4) **பொருளாதார நோக்கங்களைக் கொண்ட சர்வதேச அரசார்பு நிறுவனங்கள்:** சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வங்கி போன்றன. |
| 3) சர்வதேச அரசசார்பற்ற நிறுவனங்கள் | • அரசார்பற்ற நிறுவனங்களின் எண்ணிக்கை இன்று சுமார் 5000 த்தையும் தாண்டியுள்ளது. அவற்றுள் மனித உரிமை நிறுவனங்களுக்கு உதாரணம்: Human Rights Watch, Amnesty International<br>• (பல்தேசியக் கம்பனிகளுக்கு உதாரணம்: கொகா கோலா, அலிபாபா, அப்பிள், நெஸ்ட்லே, மைக்ரோசொப்ட் போன்றன. |
| 4) கீர்த்திமிகு தனிநபர்கள் | • பரிசுத்த போப்பாண்டவர், தலாயிலாமாபராக் ஒபாமா, பிள்க் கிளின்டன், பிரதமர் டொனி பிளேயர் மற்றும் அலெக்செண்டர் பூட்டின் போன்றவர்கள். |
| 5) பயங்கரவாதக் குழுக்கள் | • அல்கைதா மற்றும் ISIS போன்ற அமைப்புகள் போன்றன. |

## சர்வதேச அரசியலில் தேசிய அதிகாரமும் தேசிய அபிலாஷையும்

சர்வதேச அரசியலில் தேசிய அரசுகள் பின்வரும் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளும் பொருட்டு தமது தேசிய அதிகாரத்தினைப் பிரயோகிக்கின்றன.

1) தேசியப் பாதுகாப்பு
2) தேசியபொருளாதாரத்தை உயர்நிலைப்படுத்தல்
3) தேசிய புகழைப் பாதுகாத்து நிலை நிறுத்தல்
4) தேசிய கொள்கையைப் பாதுகாத்து நிலை நிறுத்துதல்

**தேசிய அரசுகள் மேற்குறிப்பிடப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றும் பொருட்டு சர்வதேச அரசியலில் பயன்படுத்தும் உத்திகள்**

1) வெளிநாட்டுக் கொள்கைகள்
2) தூதுவர் சேவைகள்
3) பொருளாதாரப் பலம்
4) உளவுச் சேவை
5) பிரச்சாரம்
6) போர் நடவடிக்கைகள்

**தேசிய அதிகாரம்**

"யாதாயினும் ஒரு அரசின் விருப்பை வேறொரு அரசின் மீது படியச் செய்து தமக்குத் தேவையான விதத்தில் கட்டுப்படுத்துவதற்கும் அதற்குக் கீழ்படியாதவிடத்து செல்வாக்கைப் பயன்படுத்தி கீழ்படியச் செய்யவும் உள்ள ஆற்றல் தேசிய அதிகாரம்" எனப்படும்.

**ஒரு அரசு தேசிய பலத்தை உருவாக்கிக் கொள்வதில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள்**

1. இயற்கைக் காரணிகள் : (உ-ம்) நாட்டின் அமைவிடம், இயற்கைவளம், சனத்தொகை
2. விஞ்ஞானம், தொழில்நுட்பம், கைத்தொழில் மற்றும் படைத்திறன் காரணிகள்
3. அரசியல் காரணிகள்
4. சமூகம் மற்றும் கருத்துக்கள் சார்ந்த காரணிகள் (உ-ம்) தேசிய உணர்வுகள், தேசிய தனித்துவம்
5. வெளிவாரி மற்றும் வேறு காரணிகள் (உ-ம்) நாட்டின் நற்பெயரும் இரகசிய உளவுச் சேவையின் வினைத்திறன் என்பன.

MJM. Saneer MA MJM. Saneer MA MJM. Saneer MA

# சமகால சர்வதேச அரசியலின் முக்கியமான போக்குகள்

1. பல்துருவ உலக முறைமை
    - இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னர் அதுவரை ஐரோப்பாவை மையப்படுத்தியிருந்த அதிகாரச் சமநிலை தெளிவான மாற்றத்திற்கு உள்ளானது. இதில் அமெரிக்கா உலக வல்லரசாக விருத்தியடைதல் தெளிவாக நடைபெற்றது.
    - அமெரிக்கா - முதலாளித்துவம், ஐரோப்பிய நாடுகள் - லிபரல் சனநாயகம், ரஸ்யர், சீனா போன்றன சமவுடைமைவாதத்தை முன்னணி பொருளாதார அரசியல் கோணங்களாக் கொண்டுள்ளன.
    - 1990 தசாப்தங்களின் பின்னர் அரசுகளும் பல பிராந்தியங்களும் சர்வதேச அரசியலின் வலுச்சமநிலையின் நடிகர்களாக மாறியுள்ள நிலையினை காண முடிந்தது. (உதாரணம்)
        - கிழக்காசிய அரசுகள் (ASEAN அமைப்பு) மற்றும்
        - சீனா, இந்தியா, தென்னாபிரிக்கா, ரஸ்யா மற்றும் பிறேசில் போன்ற BRICS என குறிப்பிடப்படும் நாடுகள் பொருளாதார ரீதியாக பலமிக்கவையாக மாறின.

2. மாற்றுச் சர்வதேசத் தொடர்பு வலையமைப்புகள்
    - நவீன உலக முறைமையினுள் முன்னர் காணப்பட்ட சர்வதேச அமைப்புகள், இராஜதந்திர தொடர்புகள் மற்றும் பொருளாதாரத் தொடர்புகளால் வழிநடத்தப்படுகின்ற உலக முறைமைகக் மாற்றீடாகச் சர்வதேச தொடர்புகள் வலையமைப்பினைக் காண முடிகின்றது. முகநூல் சமூக வலையமைப்பு சார்ந்து உருவாகிய மக்கள் இயக்கம் பலமான பிரசார மற்றும் தொடர்பாடல் முறையாகச் செயற்படுகின்றது. இது "அரபு வசந்தம்" எனும் எதிர்ப்பு இயக்கத்தில் முக்கியமாக காணமுடிந்தது.

3. நவீன சமூக இயக்கங்கள்
    - அரசுகளின் எல்லைகளைக் கடந்து தமது தேவைகள் மற்றும் அபிலாசைஷளை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக இவ்வாறான சமூக இயக்கங்களை ஊடகமாகக் கொண்டு ஒழுங்கமைக்கப்பட்டுள்ள சர்வதேச சமூகம் அதனூடாக அரசுகளின் உள்ளக மற்றும் வெளியக கொள்கைச் செயற்பாட்டிற்கு அழுத்தம் கொடுக்கின்றன.

    - அரசியல் மற்றும் சமூக செயற்பாட்டினை ஒழுங்கமைக்கும் மாற்று சக்தியாக புதிய சமூக இயக்கம் (New Social Movements) தோன்றியுள்ளது. சமூக செயற்பாட்டாளர்களின் சர்வதேச தொடர்பு வலையமைப்பை ஊடகமாகக் கொண்டு உலயகமாதலுக்கு எதிராக உருவாகும் எதிர்ப்பு இயக்கங்கள் உலக சூழல் இயக்கங்கள் என்பன இதற்கான உதாரணங்களாகும்.

**அறிந்து வைத்திருக்க வேண்டியது:**

- **வெஸ்பாலியா சமாதான உடன்படிக்கை**
  ஐரோப்பிய நாடுகள் பலவற்றுக்கிடையில் 1618 முதல் விருத்தியடைந்த முப்பது வருடகால யுத்தம்முடிவுறுத்தப்பட்டு, 1648 இல் ஐரோப்பிய இனத்தவரிடையே கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கை வெஸ்பாலியா சமாதான உடன்படிக்கை (Westphalia Peace Treaties) என இனங்காணப்படுகின்றது.

- வெஸ்பாலியா சமாதான உடன்படிக்கையின் விளைவாக,
    1) நவீன தேசிய அரசுகள் நவீன ஆள்புல அரசுகளுடன் அடையாளங்காணப்பட்டமை
    2) நவீன அரசுகளின் இறைமையை ஏனைய தேசிய அரசுகள் ஏற்றுகொண்டமை இதன் முக்கிய அம்சமாகும்.

இதன் காரணமாக நவீன அரசுகள் நிலையான நிலப் பிரதேசத்தினுள், நிச்சயமானதும் ஒப்பீட்டு ரீதியில் நெகிழ்ச்சியற்றதுமான எல்லைகளைக் கொண்ட ஆள்புல (Territorial) அரசுகளாக அடையாளப் படுத்தப்படுகின்றன.

MJM. Saneer MA